உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௪.] 1915௵ ஆகஸ்டு௴ [பகுதி ௮.

## ஜாபாலோபநிடதம்.

### முதற்கண்டம்.

எது குருக்ஷேத்திரத்திற்கு அடுத்தது? தேவர்கட்கு நற்கருமப் பயனையுள்ளது? சர்வபூதங்கட்கும் பிரம்மசதன்மாயுள்ளது என்று பிருகஸ்பதி யாக்ஞவல்கியரை வினாவினர்.

அவிமுக்தமே (காசி) * குருக்ஷேத்திரத்திற்கு அடுத்தது, தேவர்கட்கு நற்கருமப்பயனையுள்ளது, எல்லாப்பூதங்கட்கும் பிரம்ம சதனமாயுள்ளது.

(அந்த க்ஷேத்திர சிந்தனையால்) அந்த க்ஷேத்திரத்தை நீங்கி எங்குச் சென்றாலும், அவ்விடம் குருக்ஷேத்திரத்தினை யடுத்தது, தேவர்கட்கு நற்கருமப்பயனையுள்ளது, சர்வபூதங்கட்கும் பிரம்மசதனமாயுள்ளது என்று (ஒருவன்) எண்ணுவான்.

---

* இக்காசிபோன்ற பல சிவஸ்தலங்கள் வேதோபநிடதங்களிற் குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க.

இந்த க்ஷேத்திரத்தில் ஜந்துகட்குப் பிராணன்வெளிப்படுகையில் உருத்திரன்† தாரகப்‡ பிரமோபதேசம் செய்வன், அதனால் அச்சந்துக்கள் அமுர்தமாய் மோட்சத்தை யடையும்.

ஆகலின் அவிமுக்தத்தையே தரிசிக்கவேண்டும், அவிமுக்தத்தை நீங்குதல் கூடாது, இஃதிங்ஙனம் (அறிக) என்றனர் யாக்ஞவல்கியர்.

## இரண்டாம் கண்டம்.

இறுதியில்லாதவனும், மனோவாக்குகளுக் கெட்டாத இவ்வாத்துமாவெவன்? அவனை யெங்ஙன நானறிவேன் என அத்திரி முனிவர் யாக்ஞவல்கியரை வினவினர்.

அவன் அவிமுக்தத்தில் உபாசிக்கப்படுபவன், அவன் அவிமுக்தத்தில் காணப்படுபவன் என யாக்ஞவல்கியர் கூறினர்.

அவிமுக்த மெங்குளது? வரணையிநு நாசியிலும் இடையே யுள்ளது. எதுவரணை? எதுநாசி?

இந்திரியங்களி லுண்டாகும் (இம்மையைக்கெடுக்கும்) தோஷங்களியாவற்றையும் நாசஞ்செய்விப்பதால் 'வரணை', எனவும், இந்திரியங்களாற் செய்யப்பட்ட (மறுமையைக்கெடுக்கும்) பாவங்களியாவற்றையு நாசஞ்செய்விப்பதால் 'நாசி' எனப்படும்.

---

† உருத்திரன்—ருத்—சம்சாரத்தில் ஆன்மாக்களைக் கட்டும் வித்தை, அதனை எவன் பரிகரிப்பனோ அவனே ருத்திரன். ருத்-சப்தமயப் பிரபஞ்சம், அதனைத் தன்வசப்படுத்திக் கொண்டவன் ருத்திரன். ருத்-பிரமவித்தை, அதனையுபதேசிப்பவன். ருத்-சப்தமயப்பிரபஞ்சத்தை யொழிப்பவன் அதாவது மௌனசமாதியை உபதேசிப்பவன் ருத்ரன். ருத்-பிரமவிதத்தையினால் ஜீவ அவித்தையை நிவிர்த்திப்பவன் ருத்திரன். ருத்திரன்-சங்கார காலத்தில் சம்ஸ்த பிராணிகளையும் கதறச்செய்பவன். ருத்திரன்-பிரதிபந்தமாகிய ரோதிகா சத்தியைத் தொலைப்பவன். ருத்திரன்-விருத்திகளைத் தடுக்கும் தமோகுணத்தைத் தன்வசப்படுத்தினவன். ருத்திரன்-உலகத்திலுள்ள ஆன்மாக்களிடத்தமைந்த அஞ்ஞானத்தை நோக்கியிரங்குபவன், ருத்திரன்—ஆவரணத்தை நிவிர்த்திபவன், ருத்திரன்-சர்வஜனபயங்கரன்.

‡ தாரகமென்பது பிரணவமே யெனவும், அப்பிரணவம் பரசிவமே யெனவும் வேதோபநிடதபலிஷ்ட பிரமாணங்களால், தொகுதி 4 பக்கம் 47 ல் வெள்ளிடை மலைபோல் விளக்கினோம். ஆண்டுக்காண்க.

இதற்கிடமியாது? புருவங்கட்கும் நாசிக்கும் எங்குசந்தியுண்டா கிறதோ அதுவே சுவர்க்க லோகத்திற்கும் மற்றைய லோகங்கட்கும் சந்தியாம்.

இந்தச் சந்தியையே சந்தியெனக் கொண்டு பிரமநிஷ்டர்கள் உபாசிக்கின்றனர். அவிமுக்தத்திலே உபாசிக்கத்தக்கவன் அவிமுக்தன். அவன் (உருத்திரன்) அவிமுக்தஞானத்தை யுபதேசிப்பான்.

## மூன்றுங்கண்டம்.

எதனைச் செபித்ததனால் அமுர்த தன்மையைப் பெறுவான். அதனையுபதேசித்தருளுக வென யாக்ஞவல்கியரைகண்டு, பிரமசாரிகள் வினவினர். சதருத்தரியத்தாலென்றார் அந்த யாக்ஞவல்கியர்.

இவைகளன்றோ அமுர்தனுக்கு (உருத்திரனுக்கு) நாமதேயங்கள், இவைகளாலன்றோ அமுர்தனுவான்.

## நான்காங்கண்டம்.

பினர், விதேக குலத்தில் பிறந்த ஜனகமகாராஜன் யாக்ஞவல்கியரை வழிபட்டு ஓ பகவ! சந்நியாசவிதியை உபதேசித்தருள்வா யென்றனர்.

பிரமசரியத்தைப் பூர்த்திசெய்து கிரகஸ்தனுகவேண்டும், கிருகஸ்தாசிரமத்திலிருந்து வானப்பிரஸ்தமடைய வேண்டும், வானப்பிரஸ்தாசிரமத்திலிருந்து சந்நியாசமடைதல் வேண்டும், அங்ஙனமின்றி, பிரமசரியத்திலிருந்து சந்நியாச மடையலாம், கிருகஸ்தாசிரமத்திலிருந்தும் சந்நியாச மடையலாம் வானப்பிரஸ்தா சிரமத்திலிருந்தும் சந்நியாசமடையலாம், விரத முள்ளவனுயினும் விரத மில்லவனுயினும் சமாவர்த்தம் செய்தவனுயினும் இஃதில்லாதவனுயினும், அக்கினியுடையவனுயினும் இல்லாதவனுயினும் எக்கணத்தில் வைராக்கிய முண்டாகிறதோ அக்கணமே சந்நியாசம் பெறவேண்டுமென உபத்தேசித்தருளினர் யாக்ஞவல்கியர்.

ஆக்நேய மெய்கிற இஷ்டியை யியற்றவேண்டும், அக்னிபிராணரூபனுதலால் அவ்விஷ்டியை யியற்றினுல் பிராணேஷ்டியை யியற்றியவனுவன், பிரஜாபத்திய இஷ்டியை யியற்றிடுதல் கூடாது.

பினர், திரைதாவீயேஷ்டியை யிற்றவேண்டும். இதனுல் சத்துவம் ரஜசு என்ற முத்தாதுக்களும் (சமனுகும்), 'அயந்தே' மந்தி

ரத்தொடக்கத்தால் அக்கியை முகர்ந்து பார்க்க வேண்டும், அக்னிக்குப் பிராணனே யோனியாதலால் பிராணனை யடைவாயென அக்னியை யோமஞ் செய்தல் வேண்டும்.

கிராமத்தி லிருந்து அக்னியைக் கொணர்ந்து முன்னர் நிருபித்தவண்ணம் முகர்ந்தும் பார்க்கலாம்.

அக்னி யகப்படாத வரையில் ஜலத்தி லோமம் செய்யவேண்டும்; ஜலம் சகல தேவர்களின் சொரூபம், சகலதேவர்கட்கும் ஸ்வாஹாகாரத்தால் அதிலோமஞ்செய்து அதனைச் சிறிது எடுத்துட்கொளல் வேண்டும்.

நெய்யுடன் கூடிய அவிசே சுகந்தருவது, மோட்சமந்திரங்களால் வேதங்களால் அடையும் பிரயோசன மடைவன். அதுவே பிரமம்; அதனையே யுபாசிக்க. என்றனர் யாக்ஞவல்கியர்.

## ஐந்தாங்கண்டம்.

ஓ யாக்ஞவல்கிய! யக்ஞோபவீத மில்லாதவன் பிராமணனென்றனர் அத்திரி (எனவே உபவீதமில்லாதவன் எங்ஙனம் அக்னி காரியங்களை நடத்தகூடும்.)

இதுவே (ஞானமே) யஞ்ஞோபவீதம் அது ஆத்மா. நீரைக்குடித்தல் ஆசமனஞ் செய்தல் பரிவிராஜகருக்கு (சந்நியாசிக்கு) உள்ளது. வீரசுவர்க்கத்தை விரும்பித் தருமயுத்த மியற்றுபவருக்கும், அநசன (உபவாச) விரதத்திலும், ஜலப்பிரவேசத்திலும், அக்னி பிரவேசத்திலும் மகாபிரஸ்தானத்திலும் (மீளாயாத்திரை) ஆம்.

சந்நியாசி வேறுநிறம் காஷிவஸ்திரமுண்டு முண்டிதனாய் சகல பற்றற்றவனாய் பிச்சையேற் றுண்டு ப்ரம்மீ பாவம் பெறுவன். ஆதுரனாயிருந்து சந்நியாசஞ் செய்துகொண்டால் மனத்தாலாவது வாக்காலாவது சந்நியாசம் செய்துகொள்ளவேண்டும், இவ்வழி பிரமதேவனாலறிந்து இவ்வழியே பிரமவித்தாகிய சந்நியாசி செய்வன். என்றார் யாக்ஞவல்கியர்.

## ஆறாங்கண்டம்.

அவர்களில் பரமஹம்சர் ஆவார் சம்வர்தகர், ஆருணி, சுவேதகேது, துர்வாசர், ருபு, நிதாகர், ஜடபரதர், தத்தாத்ரேயர், ரைவர்கர்,

முதலியோர், இவர்கள் தெளிவான பரமஹம்ச சின்னந் தரித்தவர், தெளிவான பரமஹம்ஸாசார முள்ளவர், மயக்க முடையார் போலச் சரிப்பவர்.

திருதண்டம் கமண்டலம் சிக்யம் (உரி) யக்ஞோபவிதம் முதலியன வும், பூஸ்வாஹா முதலிய மந்திரங்களால் நீரிட்டு எக்காலமும் ஆத்ம சொருபத்தைத் தியானிக்கவேண்டும்.

நிருவாணியாய் துவந்துவமில்லானாய் பரிக்ரகசூனியனாய் தத்துவ பிரமமார்க்கத்தில் நிஷ்டையுள்ளவனாய், மனசுத்தி யுள்ளவனாய் பிராணதட்சணார்த்தம் தக்ககாலங்களில் உதர (வயிறு) பாத்திரத்தில் பிட்சையெடுத்துப் புசிப்பவனாய், அவிமுக்தனாய் லாபாலாபங்களைக் கருதாமல் சமனாய், பாழ்வீடு அக்னிவளர்க்குமிடம், ஆற்றுமனற் குன்று மலைக்குகை பொந்து, மரச்சந்து மலையருவி இவற்றில் பூமி யிலே நியமமில்லாது வசிப்பவனாய், முயற்சியற்றவனாய் மமதைநீங்கச் சுக்லத் தியானம் செய்பவனாய் பிரமநிஷ்டனாய் நன்மை தீமை யொழி ந்து சந்நியாசத்தால் தேகம் விடுபவன் பரமஹம்ஸனாம்.

மண்வழகு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்.

தொகுதி 4, பக்கம் 154, தொடர்ச்சி.

இன்னும் நம் இறைவன் அன்பர்களை யாட்கொள்ள மேற்கொண்ட செயல்களென்னத் தொலையா. அவர் தம் அன்பர்களுக்கு எவ்வளவு எளியநிலையிலுள்ளாரென்பது அச்செயல்களானறியலாம். நம் மணிவாசகர் பொருட்டு மண் சுமந்தார். "மண்முதற் சிவமீறுகிய முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்தவன் என்று என்னைக் கூறுவார்; யானே என் உண்மையன்பர் பொருட்டுக்கீழ்க் கண்டபிருதிவி தத்துவத்தை அம்முப்பத்தாறினுமேல் நிற்கும் என்சிரமேலேற்றுங் கடப்பாடுடையேன்." என்று அவர் தாம் அடியார்க் கெளியராம் நிலைமையை நன்கு புலப்படுத்தினர் போலும். என்னே அவர் பெருங்கருணை மாட்சி! நினையுங்காலுள்ள முருகுகின்றதே!

## (ச) அக்கருணையின் வகை.

இனி, அப்பெருமான் கருணைத் திறம் இருவகைப்படும். அவை அறக்கருணை மறக்கருணை யென்பனவாம். ஒரு தந்தைக்குரிய இருவர் மக்களுள், ஒருவன், "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றபடி செவ்விய நன்னெறிக்கண் ஒழுகுகின்றான். அவனுக்குத் தந்தை வேண்டுவன தந்து இன்புறுத்துகின்றான். மற்றொருவன் தந்தையுரை கடந்து தீயநெறிக்கட் செல்லுங்காலவனைத் தந்தையடித்துத் தன் புறுத்தி நன்னெறிக்கட் செலுத்துகின்றான். இவ்விருவர் மக்களிடத்துச்செய்யுமிவ் விருசெயலும் அன்புபற்றியனவேயாகும். இங்ஙனமே நம் பரமபதியின் செயலுமாம். தம்மிடத்து அன்புபூண்டு ஒழுகும் அடியார்களை யவருவப்பன செய்து இன்புறுத்துவர். அன்பின்றியிருப்போரை யொறுத்து நன்னெறிக்கட் செல்லுமாறு அருள் பாலிப்பர்.

இவ்விரு செயற்கும் அவ்வான்மாக்களிடத்துத் தாம் வைத்த கருணையே காரணமாகும். இவற்றுண் முன்னையது அறக்கருணை யெனவும், பின்னையது மறக்கருணை யெனவுங் கூறப்படும். நம்சமய நூல்களையும் உலகியலையும் அறியார்சிலர் "யாவர்க்கும் ஒப்பவிருத்த லன்றே கடவுளியல், அவ்வாறின்றிச்சிலர்க்கு இதஞ்செய்தலும், சிலர்க்கு அகிதஞ்செய்தலும் என்னை?" யென்பர். இவ்வுலக பரிபாலனஞ் செய்யும் அரசியலை நோக்கினும் இவ்வுண்மை மிக வெளிதிலறியத் தக்கதொன்றும். இதுகருதியே திருவள்ளுவதேவரும் "அறத்திற்கே யன்புசார்பென்ப வறியார், மறத்திற்கு மஃதேதுணை" என்று கூறினர். இத்திருக் குறளுக்கு மறத்தை நீக்குதற்கும் என்று ஆசிரியர் பரிமேழலகர் உரை கூறினர். இதனினுஞ் செவ்வையாக அறத்தைச் செய்தற்கு அன்பு துணையாதலால் போல ஏனைமறத்தைச் செய்தற்கும் அன்பு துணையாம் என்று கொண்டு இவ்விரண்டனுட் பின்னதை யன்பு பற்றியமறமெனக் கோடல் சிறப்புடைத் தென்பதுணர்க. இங்ஙனமே நாயன்மார்கள் செயலுமாம், நம்வைதிக சைவசமய நெறியை யழிப்ப முற்பட்ட சமணர்கள் பாண்டியவரசனால் ஒருக்கப்பட்டுக் கழுவேறுங்கால், அதனை விலக்காமையால் திருஞானசம்பந்த சுவாமிகள் கருணையிலரென்பர் ஒருசிலர். அன்னோர், ஒருகுடிநலம்பெற ஒருவனையும், ஒரூர் நலம்பெற ஒரு குடியையும், ஒரு தேயநலம்பெற ஒரூரையுங் கெடுத்துக் காத்தலறமாயென்று அறநூல் கூறுதலையு முணர்ந்திலர்; "பொறையெனப்படுவ தாடவர் தமக்குப்பூணெனப் புகலினும் பொருந்தார், முறையறப்புரிந்தா லக்கணத்தவர்த முடித்தலைதுணிப்பதே முழுப்பூண்" என்னு நீதியையு முணர்ந்திலர். இன்னும்பல பிரபல நியாயங்களுளவெனினும், அவையீண்டு வேண்டற் பாலனவல்லவாதலின், விரித்திலன். ஆகவே, சிவபிரான் செயல்கள் "எக்கிரமத்தினுனு மிறைசெய லருளே யென்றும்" என்றுங்குக் கருணை காரணமாகவுள்ளனவேயாம்.

## (ரு) அக்கருணையா லான்மாவெய்தும் பயன்.

இனி, அப்பெருமான் கருணையானுண்டாம் பயனைச்சிறிதுகூறுவல். ஆன்மாக்களநாதி கேவலத்தி லாணவமலத்தாற் பிணிப்புண்டு இருட்டறையிற் கிடக்கின்ற கண்ணிலாக்குழவிபோல் நினைவு செயலற்றுக் கிடக்குங்கால் விவிதசக்திகளையுடைய அவ்வாணவமலத்தைக் கழுவுதற்பொருட்டுக் கன்மமல மாயாமலங்களை யவ்வவற்றிற்கேற்பப்பயனுறச்செய்து, சிறிது அறிவெழக்கண்டு, படைத்தன் முதலிய

ஐந்தொழில்களையும் புரிந்து, இறுதியிற்றந்திருவடி யின்பத்தை யீதற்குக்காரணம், தம் அளவிலாப் பெருங்கருணையேயாகும். இவ்வுண்மையை,

"அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்
டருளி லழிந்திளைப் பாறி மறைந்திட்
டருளான வானந்தத் தாரமு தூட்டி
யருளாலென் னந்தி யகம்புகந் தானே."

என்னுந் திருமந்திரமும் வலியுறுத்துவதாம். இனி அப்பெருமானைக் காண்டற்கும் அவர்கருணையே கண்ணாதல் வேண்டும். கேநோபநிடதத்தில் "இந்திரன் இயக்க வடிவத்துடன் வந்தபரம்பொருளாகிய சிவபிரானை ஆங்குத்தோன்றிய உமாதேவியாராகிய அருட்சக்தி காட்டலாற் றெளிந்தான்" என்று கேட்கப்படுதலானும், "மெய்யருளாந் தாயுடன்சென்று பின்றாதையைக்கூடி" யென்று பட்டினத்தடிகள் அருளினமையானும், "அவனருளாலே யவன்றாள்வணங்கி" எனவும், "அவனருளே கண்ணாகக்காணினல்லான்" எனவும் போந்த திருவாக்குக்களானும் இவ்வுண்மை நன்குபுலனாம். "ஆங்கவனருளாற் பத்தி நன்குண்டாம்" என்றபடி இறைவனையடைதற்கு மிக முக்கியமான பத்தியும் அவனருள் வழியுண்டாமெனின்; வேறிதன்பயனை யெவ்வாறுரைப்பேன்! அப்பெருமான் பரங்கருணையின் பயனாகமுடிவில் நாம் பெறத்தக்கபொருள் அப்பெருமானேயாகும். இதனினுஞ் சிறந்தபயன் யாதுளது? சிவநேசர்களே! இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் விரைவிற் றோன்றியழிதன்மாலையவாகிய சிற்றின்பந்தரும் பொருள்களைப் போலாவது நித்தியானந்தவுருவமாகிய அவ்விறைவனையே தருமாட்சிமிக்க அக்கருணையைப்பெறுதற்குரிய செயலையன்றிவேறியாம் செயக்கிடப்பதுயாதுளது? ஸ்ரீ மணிவாசகனாரும் "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர், அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்" என்று இப்பேரானந்தப் பெருஞ்செல்வப் பேறு அவர் கருணையினாற் பெற்றதம் அநுபவவுண்மையை நம்மனோரும் உய்யவெளிப்படுத்தியருளினார்கள்.

(இன்னும்வரும்)

இங்ஙனம்,

மு. கதிரேசன்,

மகிபாலன்பட்டி.

———

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சிவோபாசன மகிமை.

---

தொகுதி-4, பக்கம்-119, தொடர்ச்சி.

## திருத்தாண்டகம்.

"அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை யருமறையி னகத்தானை யணுவையார்க்குந்—தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத் திகழொளியைத் தேவர்க்கடங்கோனை மற்றைக்—கரியானை நான்முகனைக்கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற—பெரியானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே."

இவ்வருட்பாவின் ஈற்றில் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே, என்றருளியது இவ்வான்மா, மனிதஜன்மத்தை யடைந்தும் அதனாலெய்தும் பயனையடையாது வீணேகாலங் கழிப்பதுமாம்.

பரமகருணாநிதியாகிய சிவபிரான், இவ்வான்மாக்கள் உய்தற்கேதுவாகிய பிரபஞ்சமும் பிரபஞ்சகர்த்தாவாயும் திகழ்கின்றார் அவ்விதம் விளங்கினும் அவரது உருவம் எல்லாம் சிவசத்தி வடிவினதேயாம்.

இதனாற் சிவம்சதாசிவம் மஹேஸ்வரரென்றும், லயபோகாதிகாரென்றும், நிஷ்கள, சகளநிஷ்க்கள, சகளரென்றும்பரியாய நாமங்களைப்பெறுவர். பின்வரும் பௌட்கராகம சுலோகத்தானும் தெற்றன விளங்கற்பாலதேயாம்.

"லயாதிகோப்பியம் பேதசக்த்தி தஸ்த்து ததஸ்திதகா பிந்து க்ஷோபோயதசம்போ சக்த்தேரெவ ப்ரவர்த்ததெ"

யாதினுந்தோய்வின்றி நிருபாதிகமாய்ச் சொயம்பிரகாசமாய் நிற்கும் அவ்வுண்மை நிலையே சொரூபமெனப்படும். உயிர்கள்பொருட்டு ஊருப்பேரும் உருவுந்தொழிலும் உடைய அந்நிலை தடத்தமெனப்படும். நிருபாதிகவஸ்துவாகிய கடவுள் அங்ஙனங் கொள்ளுமிடத்தும் தம்மில் நீக்கமறநின்ற சத்தியினிடமாகக் கொள்வரே யன்றி ஏனையுயிர்த்தொகுதி போலமாயையிடமாகக் கொள்ளமாட்டார்.

அவர் தம் மூண்மை நிலையிற் சிவமெனப்படுவர். ஆணவமல உபாதியை நோக்கிச் சகியாமையாற் பிறந்த அச்சிவத்தின் இரக்கமே பராசத்தி யென்று கூறப்படும்.

அச்சத்தியிலடங்கி அபின்னமாக நிற்குமவதரத்தில் அவர்பரன் எனப்படுவர் அப்பராசத்தி ஆன்மாக்களின் ஆணவமலத்தைத் தீர்ப்பதற்கு நம்மையன்றி வேறொருவருமில்லை யென்று நின்ற அவதரத்தில் ஆதிசத்தியெனப்படும் அம்மலத்தைநீக்கும் இச்சையுற்று நின்ற பொழுது இச்சாசத்தியெனப்படும், அம்மலத்தின்றரத்தையும் பிராரத்தகன்மத்தின் சுபாவத்தையும் அறிந்து நின்றபொழுது ஞானசத்தியெனப்படும், அப்பராசத்தி ஆன்மாவின்சகசமாகிய ஆணவமலத்தையொழித்தற்கு ஆகந்துகமாகிய பிராரத்தகன்மமலம் திரோதமலம், சுத்தமாயாமலம், அசுத்தமாயாமலம், என்னும் நாலையுங்கூட்டவேண்டுமென்று நின்ற அவதரம் கிரியாசத்தி யெனப்படும்.

இந்த பஞ்சசத்திகளும் சிவாம்சமென்றே கூறலாம்.

முன்னர் கூறியபடி ஆன்மாக்களின் ஆணவமலஉபாதியை நோக்கிச் சகியாமையிற்பிறந்த அச்சிவத்தின் இரக்கமே சத்தியெனப்படும்.

சிவஞானசித்தியார்.

"சிவஞ்சத்திதன்னையீன்றும் சத்திதான் சிவத்தையீன்று-மூவர் திருவரும் புணர்ந்திங்குல குயிரனைத்து மீன்றும்—பவன்பிரமசாரியாகும் பான்மொழிக் கன்னியாகுந்—தவந்தரு ஞானத்தோர்க்குத் தன்மைதான் றெறியுமன்றே".

என இத்திருவிருத்தத்தாலும் நன்குணரப்படும்.

இந்தப் பஞ்சசத்திமூர்த்திமான பரனுக்கு அருவமாகிய பரநாதமென்றும் ஆதிசத்திமுதலான நான்கு சத்தியையும் உசையதாய்நின்ற பராசத்திக்கு அருவமாகிய பரவிந்துவென்றும் பெயருண்டாம்.

இப்பரநாதமும் பரவிந்துவும் ஞானிகளுக்குத் தரிசனமாம். பராசத்தி ஆன்மாக்களுக்கு ஆகந்துகமலத்தை கூட்டுவிக்குந்தரமாக நிற்கவேண்டுமென்று நின்ற அவதரத்திற்றோன்றிய அருவமாகிய சிவத்துக்கு அபரநாதமென்றும் இதற்கு அபின்னமாகிய சத்திக்கு அருவமாகிய அபரவிந்து வென்றும் பெயருண்டாம். இவ்விரண்டும் யோகிகட்குத் தரிசனமாம் இந்த அபரசத்தி ஆன்மாக்களுக்கு ஆணவமலந்தீரப் பிராரத்தகன்மத்தைக் கொடுக்கவேண்டு மென்று நின்ற

அவதாரத்திற்றோன்றிய சிவமும் சத்தியும் அநுக்கிரககிருத்தியத்தையும அருவுருவத்தையு முடையசதா சிவமும், மனோன்மணியும் எனப்படும். அச்சத்தி பிராரத்தகன்மத்தை ஒவ்வொன்றாக மறைத்து மறைத்துக் கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதாரத்திற்றோன்றியது திதிகிருத்தியத்தையும் உருவத்தையும் உடைய மகேசுரனும் மகேசுரி சத்தியுமாம். அச்சத்தி உயிர்கட்கு இளைப்பொழித்தலேதுவாகப் பிராரத்தகன் மத்தை மாற்றி மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று நின்ற அவதாரத்திற்றோன்றியது சங்காரத் தொழிலையும் உருவத்தையும் உடைய உருவத்திரனும் உமையுமாம். ஆன்மாவினறிவிலே இந்த பிராரத்தகன்மம் அறியப்படுந் தொழில் நிகழ்வதற்கு அந்தக்கரணத்தை நிறுத்த வேண்டுமென்று நின்ற அவதாரதிற் றோன்றியது திதி கிருத்தியத்தையும் உருவத்தையும் உசைய விஷ்ணுவும் இலக்குமியுமாம் பிராரத்தகன்மத்தை அறியுந்தொழிலை நிறுத்துதற்குத் தாரகமாக அறிகருவிகளாகிய இந்திரியங்களைக்கொடுக்க வேண்டுமென்று நின்ற அவதாரத்திற்றோன்றியது சிருட்டித்தொழிலையும் உருவத்தையும் உடைய பிரமாவும் சரஸ்வதியுமாம் இவ்வைந் துந்தேவர்க்குத் தரிசனமாம்.

இவையே அவருடைய சொரூபதடத்தநிலை யெனகூறப்படும்.

சிவாநுக்கிரகத் தன்மை இவ்விதமிருத்தலால் இவற்றை நன்காராய்ந்து அவனது திருவருளைப் பெறமுயன்று இப்பிறவித்தொல்லையினீங்கி முத்திஎய்துதலே ஆவசியகமும் அறிவுடைமையுமாம்.

சிலவீணர்கள் அவ்விதம் முயல்பவர்களைத் தடைசெய்து அவர்களையுங் கெடுத்துத் தானும சிவத்துரோகிகளாகிறார்கள்.

"யாவரேன் மழுவலாளையிகழ்வ ரேனுடனே யந்தப்—பாவரையடுதல் வேண்டும் படாதெனிற் பழிமேல் வைத்து—விலகேவேண்டும் ஆவியீய்ந்திடாரவ்வூர்விட்டுப்—போவதே வேண்டும் வேண்டார் பொருந்துவர் சிவத்துரோகம்.

என்ற ஆன்றோர் வாக்கை நன்குணரற்பாலது.

(இன்னும்வரும்)

இங்ஙனம்:

S. நடேச தேசிகர்,

கவர்ன்மெண்ட்ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

கோட்டுச்சேரி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கடவுளும் சமயமும்.

உலகம் பலவகைத் தோற்றத்தது இவ்வுலகில் நாம் பார்க்கும் எல்லாப் பொருள்களும் தோன்றி இருந்து அழியும் இயற்கையன. குடம் முதலியவற்றைக் கண்டபோது அவற்றைச் செய்தவனொருவனுண்டென்பது போல இப்பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் நிலையையும் அழிவையும் உற்றுநோக்குமிடத்துக் கர்த்தாவாகியசெய்பவன் ஒருவன் இருக்கவேண்டு மென்பது எளிது புலனும். இதனை நாஸ்திகர் தவிர எல்லாச் சமயத்தாரும் அங்கீகரிப்பர். ஆகவே சிருட்டியாதி புரியுங் கருத்தா வுண்டெண்பது துணியப்படும். அக்கருத்தாவைத் தான் கடவுள் என்ற பெயராலழைக்கிறோம். கடத்தற்றொழிலின் முதனிலையாகிய கட என்னும் பகுதியும், அவன் அவள் அது என்னும் ஒருமை முப்பாலில் ஒன்றனை யுணர்த்தும் உள் என்னும் வினைமுதற்பொருள் விகுதியுஞ் சேர்ந்து கடவுள் என நிற்றலால் கடந்த பொருள் என்பதே கடவுள் என்ற சொற்குப் பொருளாகின்றது. இப்பொருளே ஆன்றோர் கொண்ட பொருளாகும். இங்ஙனமின்றிக் கடவுள் என்பது கடத்தல் என்னும் பொருள் தந்து ஆகுபெயராய்க் கடத்தலையுடைய பொருள் என்பதை உணர்த்துமெனக் கூறுவாருமுண்டு.

கடந்த பொருளெனவே எவற்றைக் கடந்த பொருள்? எவ்வாறு கடந்தது? ஏன் கடக்கவேண்டும்? என்பனவாதிய சங்கை நிகழும். அன்றியும் கடக்கப்பட்ட பொருள்களு மிருக்க வேண்டுமாதலின் அப்பொருள்கள் யாவை? எனவும் ஆராய்ச்சி நிகழும். இங்ஙனம் ஆராயப்புகின் உலகில் உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகி மாயாசம்பந்தப்பட்ட சேதனுசேதனப் பொருள்கள் யாவும் கடக்கப்படு பொருள்களென்பது பெறப்படும்.

இனி எவ்வாறு கடந்ததெனின் நிலங் கடந்தான் நதி கடந்தான் என்புழி அவற்றோடு தோய்ந்து பற்றின்றி நீங்கினனென்பது வெளி யாதலின் அவ்வாறே சேதனசேதனப் பொருள்கள் எல்லாவற்றுட னுந் தோய்ந்தும் அங்ஙனம் தோய்தலால் உறத்தக்கதாகிய பற்றுச் சிறிதுமின்றி நீங்கி அப்பாற்பட்டதெனக் கொள்ளவேண்டும். இதனாற் றான் "ஒன்று நீ யல்லை" எனவும், "எல்லாமா யல்லதுமாய்" எனவும், "அவனன்றி ஓரணுவு மசையாது" எனவும், "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே" எனவுங் கூறுவர் பெரியோர்.

இனி ஏனிவ்வாறிருக்கவேண்டும்? பொருள்களோடு தோய்ந்தாவது தோயாமலாவது இருந்தலாகாதோ எனின், ஆகாது. என்னை? பொருள்களோடு தோய்ந்திருப்பின் காணப்படுவனவெல்லாம் அழி படுமாதலின் அப்பொருள்க ளழியும்போது தானும் அழியவேண்டி வரும். தோயாது இருப்பின் கடவுட்கு அந்நியமாகிய பொருள்களு முளவெனப்பட்டு எங்கும் நிறைதலின்மை பெறப்படும். ஆதலின் சர்வவியாபகமாய் எங்கும் நிறைந்தும் யாதொன்றிலும் பற்றுமலும் எல்லாப் பொருள்களிடத்தும் எள்ளினுள் எண்ணெய்போல் அந்தர் யாமியாய் மறைந்து நிறைந்திருத்தலே கடவுளின் இலக்கணமாமென்க.

இங்ஙனம் எல்லாப் பொருள்களிடத்தும் அந்தர்யாமியாகி மறை ந்து நிற்பதுதான் கடவுளிலக்கணமாயின் அக்கடவுள் யாண்டுங் காணப்படாத பொருளோ எனின் காணப்படின் அழியப்படும். யாண் டுங் காணப்படாதேல் முயற்கோடு ஆகாயப் பூப்போல் இல்பொருளா கும். ஆதலின் ஒருவாற்றாற் காணப்படாமையும், ஒருவாற்றாற் காணப் படுதலும் உண்டெனக் கொள்க. அறிவு வளர்ச்சியால் உலகத்தோற்ற மாதியவறை யுய்த்துணரும் ஆற்றலில்லாத நாஸ்திகராற் காணப்ப டாத பொருளாகவும், உலகத்தோற்ற மாதியவற்றை யுய்த்துணரும் அறிவாற்றல் கொண்டுள்ள ஏனைச் சமயத்தார்க்கு அவரவர் பக்குவத் துக்கேற்பச் சிலர்க்குப் பொதுமையாகவும், சிலர்க்குச் சிறப்பாகவும் காணப்படு பொருளாகம் கூறப்படுவர். ஆயின் பொதுமைக்காட்சி யாது? சிறப்புக்காட்சி யாதென ஆராய்வாம்.

ஒருகுகைக்குள்ளுற்ற சிங்கம் கர்ச்சித்தபோது அத்தொனியைக் கேட்டவருள் சிலர் இம்மலைக் குகையுள் யாதோ ஒரு பிராணி இரு ந்து சத்தமிடுகின்றது என்று மட்டும் அறிதல்போல பிரபஞ்சத்தோ ற்ற முதலியவற்றை நோக்கி உலகம் இங்ஙனம் நிகழ்தற்கு ஏதுவாகிய

கர்த்தா ஒருவன் உண்டு என மாத்திரம் அறிதல் பொதுமைக் காட்சியாம். மற்றுஞ் சிலர் இங்கே கர்ச்சித்தது சிங்கம். அது வெண்ணிறமும் பரந்த முகமும் நான்கு பாதமும் சிறுகிய இடையும் கொண்டு மிருகவர்க்கத்துட் பட்டது என அறிதல்போல உலககாரணாகிய கர்த்தா இன்ன தன்மையர், இன்ன குணங்களுள்ளவர் என்பனவாகிய இலக்கணங்கள் முற்றுமறிதல் சிறப்புக்காட்சியாம்.

ஆகவே இறைவனது சிறப்புக்காட்சி பெறுதல் இன்றியமையாததாயிற்று. இப்படியன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்னும் சிறப்புக்காட்சியை அவனருளே கண்ணாகக்காணிற் காணலாமன்றி வேறுவகையாற் காணுதலமையாது. மாயா சம்பந்தமான உலகஞானம் எதுவரையில் முனைத்துநிற்குமோ அதுவரையில் அவனருளாகிய கண்ணைப்பெறுதல் இல்லை. அருட்கண்ணைப் பெறவேண்டின் பாவச் செயல்களை விடுத்துப் புண்ணியச் செயல்களை மேற்கொண்டு, யான் எனது என்னும் அகப்பற்றையும் புறப்பற்றையும் அறக்களைந்து, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை மார்க்கங்களிற் பிரவேசித்து, "எல்லாமுனுடைமையே எல்லாமுனடிமையே யெல்லாமுனுடைய செயலே" எனுபதைக் கடைப்பிடித்து முயன்றால் நித்தியத்துவம், வரம்பிலாற்றல், வரம்பிலின்ப மென்னும் சச்சிதானந்தப் பிழம்பாகிய கடவுள் ஆன்மாக்களின் இருவினையொப்பு மலபரிபாக சத்திநிபாத பக்குவத்துக் கேற்றவாறுதாமே வெளிப்படுவர். இறைவன் வெளிமுறையை அடியில் வருந்திருப்பாசுரம் இனிதுவிளக்கும்.

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

இதன் பொருள்.—இறைவன் விறகினிடத்து நெருப்புப்போலவும், பாலினிடத்து நெய்போலவும், மணியினிடத்து ஒளிபோல்வும் வெளிப்படாமல் மறைந்திருக்கின்றான். விறகிலிருந்து நெருப்பையும், பாலிலிருந்து நெய்யையும், மணியிலிருந்து ஒளியையும் பெறவேண்டியவர்கள் ஒரு கோலை நாட்டி அதிலொருகயிற்றைப்பூட்டி யிழுத்துக் கடையவேண்டும் கடைந்தால் நெருப்பும் நெய்யும் ஒளியும் வெளிப்படத் தோன்றும். அதுபோல மறைந்து நிற்கும் இறைவனையடைய விரும்பியவர்கள் பத்தியாகிய கோலை நாட்டி ஞானமாகிய கயிற்றை

மாட்டிப் பலமுற இழுத்துக் கடைவார்களானால் இறைவன் வெளிப் பட்டுக் காட்சி தந்தருளுவன் என்பதாம்.

இதனுள் விறகில் நெருப்புப்போலவும், பாலில் நெய்போலவும் இறைவனுளன்என மூன்றுவகைப்படுத்தினமைக் கேற்பவே "முறுக வாங்கிக் கடைய" எனக் கூறியதையும், முறுக வாங்கிக் கடைய, வாங்கிக் கடைய, கடைய என மூன்றுவகையாக்கிக் கொள்ளவேண் டும், விறகில் நெருப்பு எடுப்பவர் பலமாக இழுத்துக்கடைந்தாற்றான் நெருப்புக் கிடைக்கும். பாலில் நெய்யெடுப்பவர் இழுத்துக் கடைந் தாலே போதும், நெய் வெளிப்படும். மணியில் ஒளியைக்காணுதற்குப் பலங்கொண்டு இழுத்துங் கடையவேண்டாம். சாதாரணமாகக் கடை தலே போதும், ஒளிவிளங்குவதாம். இவ்வாறு மேலே மூன்றிடஞ் சொன்னமைக் கேற்ப கீழேமுறையும் மூன்றாகக்கொள்ளக் கூறியரு ளினர். பத்தியானது எக்காலத்தும் எவ்வாற்றானும் சிறிதுஞ்சலன முறாது இறைவனிடத்தே அழுந்தி நிற்கவேண்டுமாதலின் அதனைத் தயிராகவும், ஞானமானது மேலும்மேலும் ஆராய்ந்து சென்று சேர் தலின் அதனைக் கயிறாகவுங் கூறியது உய்த்துணரத் தக்கதென்க.

இங்ஙனம் மூன்று முறையாகச் சொண்டு கூறுமாறென்னெனில் தேவர் இருடிகள் மானிடர் முதலாக எறும் பீறாகவுள்ள சகலர் அதி பக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் என மூவகையாவர். அவருள் மலபரிபாகம் வராத அபக்குவர்கள் தாம்செய்த கன்மத்துக் கீடாகப் புவன சரீரங்களையெடுத்துப் போகங்களைப் புசித்துத்தொலைத்த பின் னர் மலபரிபாகம் வரப்பெற்று ஆசாரியரிடம் தீக்ஷையைப் பெற்று மோக்ஷத்தை யடைவர். இங்ஙனம் இவர் சிலகாலம்வருந்தி அடைய வேண்டுதலின் இவர்க்கு "விறகிற் றீயினன்" என்க. விறகிலிருந்து நெருப்பெடுப்பவர் பலங்கொண்டு இழுத்துக் கடைந்தே எடுக்கவேண் டும். ஆதலின் "முறுக வாங்கிக் கடைய முன்னிற்கும்" எனக்கொள்க

மந்த பக்குவராயுள்ள வைசயிகர் முதலாயினோர் மந்தரம் மந்த மென்று சொல்லப்பட்டசத்தி பதியப்பெற்றவுடன் இறைவன் ஆசாரி யனை யதிட்டித்து நின்று அவர்க் கநுகுணமான தீக்ஷையைச் செய்து அவர்கள் எந்த பதத்திலே யிருந்து போகம்புசிக்க விரும்பினார்களோ அந்தப் பதத்திலே அவர்களைச் சேர்த்துப் பின்னர் மோக்ஷம்பெறச் செய்தருளுவன். இவர்கள் அபக்குவரைப்போலப் பலநாள் வருத்த மெய்தாது சிலநாளில் இறைவனை யடையக்கூடியவர்களாதலின் இவர்

க்குஇறைவன் "பாலிற்படு நெய்போல்வன்" எனவும், "வாங்கிக்கடைய முன்னிற்கு" மெனவுங்கொள்க. பாலிலிருந்து நெய்யெடுப்பவர் விறகிற் றீயெடுப்பவர்போல் பலமுறை யிழுத்துக் கடைய வேண்டாது சுலபமாக வாங்கிக்கடைதலே சாலுமாதலின் பாலிற்படு நெய்போல்வன் வாங்கிக்கடைய முன்னிற்கும் எனக்கொள்ளவேண்டும்.

அதிபக்குவராவார்க்கு இறைவன் தீக்ஷையால் மந்தரம் முதலிய நால்வகைச் சத்தியைப் பதிப்பித்துத் திவ்விய திருமேனியை யதிட்டித்துக்கொண்டு அவர்கள் பாச விமோசனஞ்செய்து ஞானக் கிரியைகளை விளக்கித் திதிகால முடியுமளவும் சுத்தாத்துவாவிற் போகங்களைப் புசிப்பித்து மகாசங்காரத்தில் மோக்ஷத்தை அடைவிப்பன். ஆதலின் இவர்க்கு "மாமணிச்சோதியான்" எனவும், "கடையமுன்னிற்குமே" எனவுங் கூட்டியுரைக்க. மணியின் ஒளியை உள்ளவாறு காண விரும்பியவர் அதிசீக்கிரத்தில் மிகச்சுலபமாகக் கடைந்து கோடலே போதுமாதலின் அதிபக்குவர் விரைவாகவும் எளிதாகவும்இறைவனை யடையக்கூடுமாற்றால் மாமணிச் சோதியான் கடைய முன்னிற்கும் எனக்கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். இங்ஙனம் சகலருள் பகுக்கப்பட்ட மூவகையார்க்கு எனக்கொள்ளாது சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்ற மூவகை யான்மாக்கட்குக் கூறிய மூன்று முறையே இவையெனக் கூறுவாறுமுண்டு. இன்னும் இத்திருப்பாசுரப் பொருளை விரிப்பிற் பெருகும்.

இனி இத்தகைய கடவுள் ஒருவரா பலரா? எனின் கூறுதும். பலரெனின் அநவஸ்தா தோஷம் உண்டாகும் ஆதலின் ஒருவர்தா னென்பது தெளிவாம். இக்கடவுளுடைய முக்கியகுணங்கள் யாவையெனின் முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என ஆறுமாம்.

எல்லாப் பொருளையும் புலப்படக் காணும் அறிவுள்வழி யல்லது எல்லாத்தொழிலும் இயற்றல் கூடாமையின் முற்றறிவும், தமதனுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றனை வேண்டில் பரிபூரணத் தன்மை யெடுபட்டுக் கடவுட்டன்மை கெட்டுப்போதலின் வரம்பிலின்பமும், முற்றறிவுடைய வழியும் அஃது அநாதி யன்றி அவாந்தரத்தில் வந்ததேல் காரணபூர்வகமாய் வந்ததெனின் வரம்பின்மைக் குற்றமும் காரணமின்றி வந்ததேல் காரணகாரிய நியமமின்மைக் குற்றமும் அடுக்குமாதலின் இயற்கையுணர்வும், பிறர்வயமுண்டேல்

பாசத்தடையு முளதாகி வேண்டிய தெய்தாமையும் வேண்டாத தெய்தலுமாகிய குற்றம் பற்றலின் தன்வயமும், ஆற்றல் குன்றுமாயின் எக்காலத்தும் எத்தேசத்தும் இளைப்பின்றித் தொழிலியற்றுதல் ஏலாமையிற் குறைவிலாற்றலும் அவ்வாற்றல் வரம்புபட்டபரிமாணமுடையதாயின் வரம்புபடாத தொழிலியற்றல் கூடாமையின் வரம்பிலாற்றலும் ஆகிய ஆறுகுணங்களும் பதிக்கு இன்றியமையாமை காண்க.

தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை எனக் குணங்கள் எட்டென்று கூறலுமுண்டு. அன்றியும் யாதேனும் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்தலுமின்மையும் முக்கிய இலக்கணமாம். பிறந்திறக்கப்படுவன யாவும் ஆன்மவர்க்கத்தனவே யெனவும், அவையில்லாத பொருளே பரம்பொருளெனவும் நிச்சயிக்கப்படும். அத்தகைய கடவுள் உலக சிருட்டியாதி தொழில் கட்குக் கர்த்தா வாதலால் அத்தொழில்களில் தொடக்குற வேண்டுமே எனின் அற்றன்று. சூரிய சந்நிதானத்தில் சூரியகாந்தக்கல் நீரைக் கக்குதலும், தாமரை மலர்தலும் கண்கூடாகக் காணப்படினும் சூரியன் அவற்றிற் றொடக்குறாமை பெறப்படுதலால் உலகசிருட்டியாதி தொழில்கள் கடவுட் கிருத்தியமாயினும் கடவுள் அவற்றிற் றொடக்குறாமை பெறப்படுமாறு உய்த்துணரத் தக்கதொன்றாம்.

(இன்னும்வரும்) இங்ஙனம்,

வியாசத்திரட்டு.

—):o:(—

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# *சங்கங்களின் பயன்.

தொகுதி 4, பக்கம் 165, தொடர்ச்சி.

மேல் நாட்டார் பெரிய காரியங்கள் முதற் சிறிய காரியங்கள் வரையில் ஒவ்வொரு காரியத்திற்கும் தங்கள் தங்களுக்குள் ஒரு சங்க முண்டாக்கி அதைமிக்க அபிமானித்து வளர்த்து அதற்குக் கட்டுப் பட்டு நடந்து அதனால் நல்ல பிரயோஜனங்களை அடைந்து வருகிறார்கள். அவர்களுள் வியாபாரிகள் தொழிலாளிகள் விவசாயிகள் வக்கீல்கள் உபாத்தியாயர்கள் பத்திராதிபர்கள் வேலையாட்கள் இன்னும் ஒவ்வொரு வகுப்பாரும் தனித்தனி தங்கட்குள் சங்க மேற்படுத்தி ஆலோசனைப்படி எதையும் செய்து கட்டுப்பாடோடு நடந்து வருவதால் அவர்கள் எந்த விஷயத்திலும் பெருமையும் இலாபமும் பெற்று வருகிறார்கள். அவர்கள் சங்கங்களையும் அதிற்பேசப்படுகிற விஷயங்களையும் அலட்சியம் செய்யாமல் நல்ல மதிப்பு வைத்து நடப்பதால் அவைகள் மிகுந்த சிறப்பையும் கௌரவத்தையும் பெற்று நீண்ட ஆயுளோடு நடைபெறுகின்றன. நமது சங்கங்களோ ஸ்தாபிக்கப் பெறுவதும் பேசுவதுமன்றி அவர்களைப்போல் மதிப்பு வைப்பதும் அதன் ஆலோசனைக்கிணங்க நடப்பதுமில்லையென்று சொல்லக்கூடும். அப்படி நடைபெறுவதில் அதிக நன்மைபெற முடியாது. முக்கியமாக இப்போது நமது நாட்டுச்சங்கங்கள் கல்வி சம்பந்தமாகவும் மத சம்பந்தமாகவும் ஆசார சம்பந்தமாகவும் ஏற்பட்டு நடைபெறுகின்றன. முதற்படியில் இத்தகைய விஷயங்களே உபயோகமானவையென்பதிலையமில்லை.

ஒருவன் தன் வாழ்நாளை இனிமையாக்கிக்கொள்ள விரும்பின் கல்வி கற்று அறிவைப் பெறுதல் வேண்டும். கல்வியாற் பெறுதலாலும் கேள்வியான் அறிவைப் பெறுதல் மிகவெளிது. எப்பொழுதும் கற்றலைவிடக் கேட்டலே நன்று என்பர் பெரியார். இமமட்டோ,

ஞானசாத்திரங்களும் கற்றலென்னாது கேட்டல் எனவே கூறும். ஏனெனின் சொல்பவர்கள் சொல்லும் பொருட்களை முன்னமேஆராய்ந்து சீர்படுத்தி வைத்திருப்பாராதலின் இப்பெருநன்மை சங்கமொன்றினாலேயே கிடைக்கற்பாலது. ஒருவன் தனியேயிருந்து எல்லா நூல்களையுங்கற்று அறிவைப் பெறுதலென்பது இயலாத காரியம். பல நூல்கள் கற்றுணர்ந்தபல்லோர் குழுமிய சங்கத்தின்கண்பலரும் தாம் தாம் கற்ற நூற்கட் பொதிந்த நுண்ணிய பொருள்களை எடுத்துக் காட்டி இனிது விளக்குவர். அதனால், பல நூல்கள்பயின்று பெற வேண்டிய அறிவு ஒருவனுக்கு சங்கத்தாற் கிடைக்கின்றது. ஆதலின் தக்கவாறு கல்வி கல்லாதவரும் சங்கமெய்துவரேல் சாற்றரும் பயன் பல சாலவெய்துவ ரென்பது திண்ணம். இனிக்கற்றவர்களோ தாங்கள்கற்றநூற்பொருள்களைப் பிறர்க்குஎடுத்துக்கூறுவதனால்ஐயமகன்று மேன்மேலும் பேரறிவு கிடைக்கப் பெறுகின்றார்கள். இன்னும் தாங்களறியாத மர்மங்களையும் அறிந்து கொள்ளுகின்றார்கள்.

இங்ஙனம் கற்றவர் கல்லாதவர் என்னும் இருதரத்தாருக்கும் பன் முகத்தானும் நன்மை பயப்பது பங்கமகற்றும் சங்கமே என்க. கற்றுத்தேர்ந்த புலவர்களையும் குற்றந்தீர்ந்த பெரியோர்களையும் அகப்படுத்துதற்குச் சங்கமே தகுந்தவலையாம். இத்தகைய சங்கங்களில் எவ்வளவோ அரிய பெரிய பொருள்கள் வெளிப்படுத்தப் பெறும். அவையனைத்தும் கற்றுப் பயன் பெறலாம். கற்றாரை நோக்கி மேன்மேலும் கற்க முயலலாம். அங்கு உபந்யசிக்கும் பல விடயங்களைக் குறித்தும் பல நூல்கள் விரைந்து பார்க்க வேட்கையுண்டாகும். இவைகளினால் சங்கத்திற் சேர்ந்த ஒருவன் ஒரு புலவனாய்விடுவனென்று சொல்லலாம். ஆனது பற்றியே 'கண்டதுகற்கப் பண்டிதனாவான்' என்னும் முதுமொழி எழுந்தது. மேலும் சங்கத்தில் பலவிடயங்களைப் பற்றி வாதம் செய்வதனால் வாக்கு வல்லமை ஆக்கம்பெறுகின்றது. வாக்கு வல்லமையின் சிறப்பை வழுத்தவும் வேண்டுமோ?.

'சொலன் வல்லன் சோர்விலனஞ் சானவனை
யிகல் வெல்லல் யார்க்கு மரிது'

என்ற பொய்யா மொழியே அதனை நன்கு விளக்கும். கல்வியை ஆராய்ந்தறிந்தும் கேட்போருக்குப் பொருள் விளங்கச் சொல்லும் சொல்லின் வல்லமை ஒருவற்கில்லையெனின் அக்கல்வி என்ன பயன் படும். அச்சொல் வன்மையு முளதாயின் பொற்பூ மண முடையது

பேர் லும் என்பர் ஆன்றோர். இத்துணைச் சிறந்தவர்க்கு வல்லமையைச் சங்கமொன்றே தருந்திறத்தது.

இன்னும் காரியங்களைச் சீர்தூக்கித் தீர்மானிக்கும் திறனும் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு நடப்பதினுல் நம்மையே நாம் பாதுகாத்துக் கொள்ளும் தன்மையும் சபைத்தலைவர் காரியதரிசி முதலிய வேலைகள் பார்ப்பதனுல் நமக்கேற்பட்ட வேலைகளை நாமே முட்டின்றி முடிக்கும் பொறுப்பும் பிறரையாளுந்திறனும் இவை போல்வனவும் பிறவும் நமக்குண்டாகின்றன. பல பெயர்கள் ஒன்று சேர்ந்து அளவளாவுதலால் அன்பு ஒற்றுமை நல்லொழுக்க முதலியவற்றை நாமடைகின்றோம். இவை நம் வாழ்நாளை எவ்வளவு செவ்வைப்படுத்து மென்பதை ஊகித்துணருங்கள். கண்ணுதற் பெருங்கடவுளே கழகமோடமர்ந்து தமிழாராய்ந்தன ரெனின் சங்கத்தின் பெருமையைச் சாற்றுவதெங்ஙன்? ஆதலின் அறிவைப்பெருக்கி அளவற்ற நன்மைகளை விளைவிக்கும் சங்கங்களில் ஒவ்வொருவரும் சேர்ந்து உழைத்தல்வேண்டும். அச்சங்கங்கள் தளர்வுறுதலின்றும் நின்று நிலவுமாறு எல்லாம்வல்ல இறைவன் கிருபை பாலிப்பாராக.

நண்பர்களே! யானிதுகாறுங் கூறியவற்றைத் தொகுத்துச் சொல்லுமிடத்துச் சங்கம் இருவகைப்படு மென்பதூஉம், பலர்கூடிச் செய்கிற காரியம் பெரிதும் நலம்பயக்கு மென்பதூஉம், அறிஞர்கள் பலர் அளவளாவிக்களிப்பதிலும் சுவர்க்க அனுபவம் சிறந்ததன்று என்பதூஉம், சங்கங்கள் கூடுவது தொன்றுதொட்ட வழக்கம் என்பதூஉம், கற்றலை விடக்கேட்பதேமேலென்பதூஉம், கற்றவர்களும்கல்லாதவர்களும் சங்கத்தால் விசேட நன்மையை அடைவார்களென்பதூஉம், ஒவ்வொருவரும் இதற்காக உழைத்தல் வேண்டும் என்பதூஉம் பிறவும் ஒருவாறு விளக்கப்பட்ட பொருள்களாம். சுபம்.

பொ. மாணிக்கம்,
தாதம்பேட்டைப் பழூர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# செம்பொருள்.

பன்னிற மணிகளும், வெண்ணிற முத்தமுந் துன்னிய முந்நீர்ச் சீர்கரந்தன்னைத் தானையாய்க்கொண்ட இம்மண்ணுலகத்தின்கண்ணே, காணப்படும் பலவகைப் பிறவிகளினும் நல்லறிவுடையோர் மானுடர்களே யாவர். இஃது உத்தமமான வித்தகவறிஞர் விளம்பிய ஒன்றாகும்; அன்றி அனுபவத்தினுந் தெளிவாகும். இத்தகைய மனிதசரீரம் நமக்கு எய்தியது பூர்வ ஜன்மாந்தரங்களிலே உஞற்றிப்போந்த தபோபலத்தானன்றிப் பிறிதொன்றானுமன்றாம். ஆகலின், பலவித யோநிவாய்ப்பட்டுப் பருவரலுற்று எல்லையில் காலங்கழித்துக் கிடைத்த சொல்லருமறிவின் பெருமை சிவணிய இத்துர்லபமான தேகத்தை நிலைமை யுடைத்தென்று நம்பியிருக்கலாமா? மின்னினும் மிளிர்தலின்மையை நோக்கி மேலாகிய கதிக்கேற்றன புரிதலே ஏற்றமடைத்து.

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்,
நிலமிசை நீடுவாழ் வார்." என்னும் அருங்குறட்பாவில் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் நம் சிந்தித வந்தனு நிலையையும் அதனால் அடையும் பிரயோசனத்தையுந் தெரித்தருளினார். இதனாலே மறைமுதற் பொருளாய் மன்றினினடிக்குங் கறைமிடற்றொருவனைப் போற்றிடின் மாற்றமிலருள் நிலைப்பு மன்னும் என்பது ஒருதலையாயிற்று. மலர் என்றது ஹிர்த்புண்டரீகத்தினை, சேர்தல் இடைவிடாது சிந்தித்தல். நிற்க,

இவ்வுலகங்களிலேயும் நீக்கமின்மையால் சிவபரம்பொருள் சர்வவியாபகர் என்று அழைக்கப்படுவதுபோலவே நிர்மலமாய் அநாதியே பாசப்பற்றில்லாததாயும் உள்ளது *இங்ஙனமே பலவருடங்களுக்கு

*யாழ்ப்பாணத்து நாவலர்கோட்டம் ஸ்ரீமாந், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களியற்றிய அபிதாந கோசத்தில் சமயாசாரியர்கள் காலம் நுட்ப ஆராய்ச்சியாற் காட்டப்பட்டிருக்கிறது.

முன் செந்தமிழ்நாடு ஈடேறும்படி குடமுழா நந்தீசரது அவதாரர் என்று சொல்லப்பட்டு, இரத்நமணியை சித்திரவசநங்களை நிரல்பட வைத்து வேதப்பொருளை விளக்கிய காரணத்தினால் தீக்ஷாகுருவாகிய பரமசிவனால் "மாணிக்கவாசகன்" என்ற காரணத் திருநாமத்தைப் பெற்ற திருவாதவூரடிகளால்,

"உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே யூற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே."

என்னத் திருவாய் மலர்ந்தருளப்பட்டது. அமிருதஸ்ய ஈசாந: மோக்ஷத்திற்கு ஈசானர். என்ற வேத உபபிருங்கணக் கூற்றும், "நிர்மல:' என்னும் பதித்துவ விளக்கபதமும் இங்கே விசேடமாகக் கவனிக்கற்பாலன. மோக்ஷ த்யாஹி என்பது "மருந்தே" என்பதனாலும் சுத்தசித்தபதி என்பது செம்பொருட்டுணிவே என்பதனாலும் உதகரித்தருளப் பட்டவாறு காண்க.

இவ்வண்ணமே ஆயிரத்தெண்ணூற் றெழுபது வருடங்களுக்கு முன்னே பரதகண்டத்திலே செழுந்தமிழில் வடமொழி வேதார்த்தங்களைக் கிளர்ந்தெடுத்துத் துலங்கநாட்டி உத்தரவேதம் என்று என்றுங் குவலயத்தோர் யாவரும் கைக்கொண் டொழுகுமாறு, பிரமதேவாம்ச அவதாரத்தரான தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனாராலே,

"சிவஸ்ஸர்வஸ்ய ஜந்தூநாம் அக்ஷாராணாம் அகாரவத்" என்ற சுலோக பாகக் கருத்தமைந்த, "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" எனத்தொடங்கி அருளிச் செய்யப்பட்ட திருக்குறளினும்,

"பிறப்பென்னும் பேதமைநீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு" என்று அமிழ்தினும் இனிமை பொதுளிய இறைவனைக் குறித்துத் தியானஞ் செய்தலின் ஆவசியகமும், அதனால் வரும்

பிரயோசனமும் இனிது விளக்கப் பெற்றிருக்கின்றன. பிறவிக்குக் காரணம் பேதைமை யென்பதூஉம், மோக்ஷத்திற்குக் காரணர் இறைவராகிய கடவுளென்பதூஉம் இதனாலே சூசிக்கப்பட்டன.

ஆணவம், கர்மம், மாயை முதலிய மலோபாதைகளை விடுத்துத் திருவருளே திருமேனியாகவுடைய சிவபரம்பொருளைச் செம்பொருளென்று யாண்டுங் கூறப்படுதலையுணர்ந்து, அறிவை நிறுத்தி ஆன்மவிடேற்றத்தைத் தேடலே மரபாம். அவிச்சை முதலிய ஐவகைத் தோஷங்களும், அகம்பாவ முகிழ்ப்புடைய மாந்தர் மேற்கிடையாத மனிதசட்டை நழுவ மேவுங்கதியாதோ! அறியேம். ஜாதிகுலம் பிறப்புக்களின் உயர்வும் தாழ்வும் ஆன்மாக்களை நல்வழியினின்று நீங்கச் செய்யுமன்றி உய்வியாதே! ஆகலின், அறிவினைப் பெருக்கி அன்பினைத்துலக்கி யாவரும் துவேஷத்துன்பொருவி, இன்பநன்னிலை யடைவோமாக. "சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள், கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர், பாத்திரஞ் சிவமென்று பணிந்திரேன் மாத்திரைக்கு ளருளுமாற் பேறரே"

முடிவுரை.

இதுவரையினும் சிற்றறிவுடையேன் எழுதிய சில வாக்கியங்களினாலே புலப்படக்கிடப்பன, செம்பொருளாய் விளங்குவோர் சிவபெருமானே யென்பதும் சிவபரம்பொருளை ராகத்துவேஷமின்றியும், தன்னுயிர்போன் மன்னுயிர் ஓம்புந் தலைமையினின்றும் வழிபடல் வேண்டும் என்பதும், இவ்வழிபாடு மானுடர்க்கே யேய்ந்ததென்பதும், மானுடதேகமும் நிலையில்லாததென்பதும், நிலையுடைய காலத்தில் நேயசுகாநந்தராய் வாழவேண்டும் என்பதும் பிறவுமாம். இதனோடு சம்பந்தமான விஷயங்கள் பின்பு வெளிப்படுத்தலாகும். குரு வாழ்க. சுபம்.

வ. மு. இரத்திநேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர்
காரைக்குடி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பிரமரகீட நியாயம்.

இவ்வடமொழிச் சொற்றொடர் குளவி புழுவைத் தன்னினமாக்குகிற தென்றபழைய அபிப்பிராயமேற்கோளாய்க்கொண்டது. நியாயமெனினும் நயம் எனினு மொக்கும். இக்கொள்கை, குளவி பக்குவமடைந்த வோர் புழுவைத் தன்கூட்டிற்சேர்த் ததைக்கொட்டுதலாற் புழுவுக்குக் குளவியைப்பற்றிய ஞாபகந்தவிர வேறின்றாகிறது; ஆகவே சிலநாளில் புழு தன்னெண்ணத்தின்படி குளவியாய் வெளிவருகிறதென்பது. இதனையே கரன்வதைப்படலத்தில் "அஞ்சிறையறுபதடைந்த கீடத்தைத், தஞ்செனத் தன்மயமாக்குந் தன்மைபோல்" எனக் கம்பரும், கைவல்லியத்தில் "அடங்கிய விருத்தியானென்றறிந்தபின் செறிந்த மண்ணின், குடம்பையுட் புழு முன்னூதுங் குளவியின் கொள்கைபோல்" எனத் தாண்டவமூர்த்தியாருங் கூறியுள்ளார். ஆசிரியர் சிவஞான யோகிகளுஞ் சிவஞானபோதவுரையி லிப்படியே கூறுவதா லிதனைப் பிற்காலத் தோரதிகமாகப் பாராட்டி வந்தனரென்பது தெளிவாகின்றது. சிவஞானசித்தியுரையாசிரியர் ஞானப்பிரகாசரொருவர் மட்டுமே யிதனை யொப்புக்கொள்ளாதொழிந்தார்.

இனி யிதனுண்மையை யாராயுங்கால் ஞானப்பிரகாச ரபிப்பிராயமே பொருந்து மெனக் கிருமி யாராய்ச்சிசெய்த எவருங்கொள்கின்றனர். குளவியின் முட்டைக்கு முதலில் வெப்பந்தருவதாய்ப் பின் பொரிக்கப்பட்ட குஞ்சுக்குப் புழு இறையாகிற தென்பதே யவர்கள் கோட்பாடு. இப்படியே கிருமி சாஸ்திரவல்லராய லப்பக் என்பவரும் பொருளகராதி யுடையாருங் கூறுகின்றார்.

இனி, பட்டுப்பூச்சி மீயும்போல் குளவியும் புழுவினின்று பிறக்கக் கூடாதோ என்னு மாசங்கை விடுப்பார்க்கு, அற்றே லிரண்டு மூன்று புழுக்காணுங்கா லொரே குளவிவருவதேனென விடுக்க.

மா. ஜீ.